செ.வெ.எண்: 04 நாள்:05.06.2021

**நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூடுதல் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாட்டு அறையை, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூடுதல் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாட்டு அறையை, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ். இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (05.06.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாமக்கல் மாவட்டத்தில், காய்ச்சல், சளி, இருமல் உடல்வலி உள்ளிட்ட எந்த அறிகுறியும் இல்லாமல் கொரோனா பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களது வீட்டில் தனிமைப்படுத்துதல் பற்றிய விபரங்கள் மற்றும் சிகிச்சை முறைகள், நோயாளிகளின் வசிப்பிடங்களுக்கு அருகில் உள்ள கொரோனா கவனிப்பு மையங்கள் விபரம், படுக்கை வசதி விவரம், நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டு முச்சுத்திணறல் காரணத்தினால் ஆக்ஸிஜன் வசதி தேவைப்படும் நோயாளிகளுக்கு ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய படுக்கை விபரங்களை பொதுமக்கள் தெரிந்துகொள்ள ஏதுவாக நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஒருங்கிணைந்த கட்டளை மையம் (வார் ரூம்) அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு தேவையான ஆக்ஸிஜன் மற்றும் ஆக்ஸிஜன் உற்பத்தி நிலையங்களிலிருந்து கொண்டு வரப்படும் ஆக்ஸிஜன் அளவு மற்றும் சிலிண்டர்கள் விவரம் கண்காணிக்கப்பட்டு வருவாய்த்துறை அலுவலர்கள் மூலமாக உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் நாமக்கல் அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் பயன்பாட்டிற்கு தேவையான மருத்துவ உபகரணங்கள் கொரோனா தடுப்பு கவச உடைகள், முககவசங்கள், கிருமி நாசினி மருந்துகள், உயிர் காக்கும் மருந்துகள் விவரங்கள் தொகுத்து தலைமைக்கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்டத்திற்கு தேவையான பொருட்கள் பெறப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டளை அறைக்கு (வார் ரூம்) 1077, 04286-281377, 04286-299137, 04286-299139, 82204 02437, 93423 12761 மற்றும் 93423 12596 ஆகிய எண்களில் தொடர்புகொண்டு, கொரோனா நோய் சிகிச்சை வசதி தொடர்பான அனைத்து விவரங்களையும் தெரிந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த மையத்தில் மருத்துவர்கள், சுகாதாரப்பணியாளர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் 24 மணிநேரமும் சுழற்சி முறையில் பணியாற்றி கொரோனா நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு தேவைப்படும் உதவிகளை போன் மூலம் போர்க்கால் அடிப்படையில் ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றார்கள்.

இன்று (05.06.2021) நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூடுதல் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா நோய்த்தொற்று கட்டுப்பாட்டு அறையை, மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது பதிவேடுகளில் குறித்து வைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு வந்த தொலைபேசி அழைப்புகளின் விவரங்களையும், நோயாளிகளின் தொலைபேசி அழைப்பின் பேரில் மருத்துவமனைகள், கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள் ஆகியவற்றில் படுக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளதையும், அறிகுறி இல்லாத, வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொரோனா நோயாளிகளின் உடல் நிலை குறித்து சம்மந்தப்பட்ட நோயாளிகளிடம் தொடர்பு கொண்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதையும், அவர்கள் தொடர்ந்து கண்காணிப்பில் உள்ளதையும் பதிவேடுகள் வாயிலாக மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மருத்துவர்.மா.மதிவேந்தன் அவர்கள் பார்வையிட்டு உறுதி செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது நன்கொடையாளர் திரு.கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவசான், சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.வி.ரமேஷ், மரு.பாலாசத்தியநாரயணன், மரு.அருண்பாரதி, மரு.சதிஷ்குமார், மரு.ஜெயந்தி, வட்டாட்சியர்கள் திரு.செல்வராஜ், திரு.வெ.ராஜேஷ் உள்பட மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.**